எம்.சி.ஓ.பி எண்: 1827/2025 தேதி: 25.11.2025

மசா. : 2

பெயர் : ஜெயராமன்

த/பெ. : மாரப்பா

வயது : 46

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 23 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

விபத்து நடந்த அன்று நான் இறந்துபோனவரின் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரி,. நான் விபத்தில் இறந்தவரின் அண்ணன். நான் தான் புகார் கொடுத்தேன். டாடாஏஸ் டிரைவர் தவறுதலாக வாகனத்தை ஓட்டி விபத்து நடந்ததாக புகாரில் கூறியுள்ளேன். விபத்து நடந்த இடத்தில் V Shape பிரிவு உள்ளது என்றால் சரி. நான் ஒரு பக்கம் வந்தேன். டாடாஏஸ் ஒருபக்கம் வந்ததுஎ ன்றால்சரி. விபத்து நடந்த இடம் இரண்டு ரோடு சேரும் சங்சன் இடம் என்றால்சரி. விபத்து நடந்த நேரம் மதியம் 12.00 மணி. நானும் என் அண்ணனும் தலைக்கவசம் போடவில்லை. விபத்து என் அண்ணனுடைய அஜாக்கிருதையால் நடந்தது என்றாலும் நான் இழப்பீடு பெறுவதற்காக டாடா ஏஸ் ஓட்டுநர் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரி. என் அண்ணன் ஓட்டிச்சென்றவாகனத்திற்கு காப்பீடு, ஆர்சி, ஓட்டுநர் உரிமம்இ ல்லை எ்னறால் சரிதான். என் அண்ணன் விவசாயம் செய்தார். ராகி, நெல் பயிரிட்டார். விபத்து என் அண்ணனின் அஜாக்கிருதையால் நடந்துள்ள காரணத்தால்2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. என் அண்ணன் என்பதால் அவருக்கு சாதமாக சாட்சி அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.